# ஹல்தும்முள்ள பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மே 07 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மே 30 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, ஹம்தும்முள்ள பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு முத்திரைக் கட்டணக் கடன் பட்டோர் கணக்கின் தொகையை விட, முன்னைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூபா 1,024,491 இற்கான முத்திரை கட்டண வருமானத்தில் இருந்து, வருமான கணக்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியக் கணக்கு செலவு வைப்பதற்கு பதிலாக, முத்திரை கட்டண கடன்பட்டோர் (நிலுவையாகவுள்ள ஏனைய வருமானங்கள்) கணக்கு வரவு வைத்து, முத்திரை கட்டண வருமானக் கணக்கு செலவு வைத்துள்ளமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியத்தின் மீதி ரூபா 1,024,491 இனால் குறைவாகவும், நிலுவையாகவுள்ள ஏனைய வருமானக் கணக்கு ரூபா 1,020,446 இனால் மிகையாகவும் ஆண்டிற்கான வருமானம் ரூபா 2,044,937 இனால் மிகையாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சபையின், ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணக் கணக்குகளில் மீதிகளுடன் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி சமமாக காணப்பட வேண்டும் எனினும், மிளாய்வாண்டு தொடர்பாக சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணக் கணக்குகளின் மீதியின் கூட்டுத்தொகை ரூபா 27,142,721 தொகை எனினும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு

கணக்கு மீதி ரூபா 21,142,721 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 6,000,000 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் மீதி ரூபா 5,142,806 தொகை எனினும் அதனை ரூபா 4,794,079 தொகை என ரூபா 348,727 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணப்படும் மீதிகளுடன் துணைப்பதிவேடுகளின் மீதிகள் இணங்காமைகளின் பெறுமதி ரூபா 1,536,500 தொகையினை சரியான மீதியை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் 14 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் மீளாய்வாண்டின் போது சொத்துக்கள் கணக்கு செலவு வைத்து மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் குறைவாகக் கணக்கீடு செய்திருந்த போதிலும், அத் தொகையை விட முன்னைய ஆண்டிற்காக மிகைப் பெறுவனவுகள் என கணக்கிடப்பட்ட ரூபா 73,885 இற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை 08 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் மீளாய்வாண்டின் போது கடன்பட்டோர் கணக்கு வரவு வைக்கப்பட்டு, திரண்ட நிதியக் கணக்கு செலவு வைக்கப்பட்டமையால், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திரண்ட நிதிய மீதி மற்றும் கடன்பட்டோர் மீதி ரூபா 73,885 வீதம் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,113,985 தொகை எனினும் அதனை ரூபா 385,375 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 728,610 இனால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்தில் இருந்து சமர்பித்திருந்த விலைப்பட்டியலின் பிரகாரம் செலுத்த வேண்டிய தொகை ரூபா 1,663,285 தொகை எனினும் அதனை கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 1,675,607 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் பொறுப்புக்கள் ரூபா 12,322 இனால் மிகையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து கிடைத்திருந்த 472 கல்வனையிஸ் கொடித் தூண்களின் பெறுமதி ரூபா 466,581 உம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த 10 பல்கரும நடமாடும் கடைகளின் பெறுமதி ரூபா 265,000 இனை கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 731,581 வீதம் குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

ஒரு கணக்கு விடயம் தொடர்பாக துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 407,736 தொகை எனினும் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் மீதி ரூபா 1,869,314 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டித்தொகை ரூபா 35,307,064 ஆகக் காணப்பட்டதுடன், செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,410,966 ஆகும்.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---------------------------------------------------------------

ரூபா 48,543,330 பெறுமதியான 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக பட்டோலைகள், காணி உறுதிகள், வரைபுகள் மற்றும் விவரமான பட்டோலைகள் சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்தவற்கு முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழ்வருமாறு

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 371 | 1994 முதல் 2014 திசெம்பர் 31 வரை காலப்பகுதியில் 21 சந்தர்ப்பங்களில் பல்வேறு சாராருக்கு செலுத்தப்பட்ட ரூபா 300,012 இற்கான முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 | சபையில் கடமையாற்றிய, சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர் ஒருவரிடம் 2005 ஆண்டு முதல் அறவீடு செய்யப்படாமல் காணப்படும் ரூபா 26,920 இற்கான பதவியணிக் கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்றுநிருபம் | சபைக்குச் சொந்தமான 29 கடைகள் தொடர்பாக மாதாந்த வாடகையை தலைமை பெறுமதி மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சி சேவையை சேர்ந்த பெறுமதி மதிப்பீட்டாளர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்திருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,706,937 ஆகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது கணக்காய்வற்குச்

சமர்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,172,420 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,534,517 இற்கான அனுகூலமான முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 வாடகை

-------------

சபைக்குச் சொந்தமான 18 கடைகளில் இருந்து அறவிடப்படவேண்டிய நிலுவையாக காணப்பட்ட பழைய கடை வாடகை ரூபா 547,922 இனை அறவீடு செய்திருக்கவில்லை.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 385,375 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 3,481,400 கிடைக்க வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

3.1.1 ஒப்பந்த நிருவாகம்

-----------------------------

கொஸ்லந்த வர்த்தக தொடர் கட்டடம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த ரூபா 5,000,000 இற்கான கடன் தொகை தொடர்பாக உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு 2014 திசெம்பர் வரை வட்டி ஆக ரூபா 2,437,921 தொகையும் மற்றும் தவணைப் பணம் ஆக ரூபா 1,233,328 ஆக கூட்டுத்தொகை ரூபா 3,671,250 இனை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. சுமார் 05 வருட காலம் கடந்துள்ள போதும் இந்த வர்த்தக தொடர் கட்டடத்தின் நிர்மான வேலைகள் பூர்த்தி செய்யாமையால் கிடைக்கக் கூடியதாகவுள்ள வாடகை வருமானத்தை இழக்க நேரிட்டுள்ளது. அத்துடன், சபை நிதியத்தில் இருந்து வட்டி செலுத்துவதற்காக நேரிட்டுள்ளமையால் சபையின் நிதி நிலைமை மீது பிரதிகூலமான பாதிப்பு ஏற்படும் இடர் ஒன்று காணப்படுகின்றது.

3.1.2 பயன்படுத்தப்படாத / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------------

2004 ஆண்டின் போது ஜோன் டியர் டிரக்டர் உடன் கிடைத்திருந்த கலப்பை மற்றும் 252 – 6369 கப் வண்டிகளில் இருந்து இரண்டு தடவைகள் அகற்றப்பட்ட 02 என்ஜின்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

3.1.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------

திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டிருந்த 472 கல்வனயிஸ் கொடித் தூண்களில் இருந்து 192 கல்வனயிஸ் கொடித் தூண்கள் மத்திரமே பொருட் பதிவேட்டில் பதியப்பட்டிருந்ததால் ரூபா 276,786 பெறுமதியான 280 கொடித் தூண்கள் காணாமல் போயுள்ளன.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் கட்டுப்பாடு